# 1 தீமோத்தேயு

# ஒரு அறிமுகம்

*வில்லியம் டி. போ அவர்கள், "இளம் மக்களை பாங்குடையவர்களாக்கு வதில் உலகின் முக்கிய பங்காற்றுவது நல்ல முதிய மக்களே"[1] என்று உரைத்தார். அதே போன்ற வழியில், இளம் சுவிசேஷகர்களை ஆவிக்குரிய வர்களாகவும் பலமுள்ளவர்களாகவும் ஆக்குகின்ற மிகச் சிறந்த சத்திய உரமூட்டும் மருந்தாக இருப்பது வயதான அப்போஸ்தலரிடமிருந்து வருகின்ற ஏவுதலின் செய்தியாகவே உள்ளது! பவுலிடமிருந்து வந்த முதல் நிருபத்தைத் தீமோத்தேயு பெற்றுக் கொண்ட பொழுது, அதை அவர் மீண்டும் மீண்டும் வாசித்திருக்க வேண்டும். இந்த நிருபத்தில் ''ஏக சக்கராதிபதியும் ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும்" (6:15) என்று விவரிக்கப்படுகின்ற ஒருவரைப் பிரதிநிதிப்படுத்துகிற எந்த சுவிசேஷகரும் தீமோத்தேயு செய்ததைப்போலவே தாம் செய்வதற்கு ஞானமுள்ளவரா யிருப்பார். இங்கு, பரலோகத்தில் அல்லது நரகத்தில் நித்தியத்தை எதிர்நோக்கியுள்ள மக்களிடம் அன்றாடம் செயல்பட வேண்டிய நிலையில் உள்ள, பூமிசார்ந்த சுவிசேஷகர்களுக்கு பரலோகத்தின் செய்தி யொன்றுள்ளது. பணியின் இயல்போ அல்லது அடைவிடத்தின் அளவோ படித்தல் அல்லது பணியில் அவரது மாறுபாட்டை அனுமதிப்பதில்லை. ஒவ்வொரு சுவிசேஷகரும், சங்கீதக்காரருடன் சேர்ந்து, "அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்" (சங். 119:72) என்று கூறுவது அவசியம்.*

## நோக்கம்

*தீமோத்தேயுக்குப் பவுல் எழுதிய முதலாம் நிருபமானது, (அந்த) இளம் சுவிசேஷகர் "விசுவாசத்திற்குரிய வார்த்தைகளில் ... தேறினவராகி" (4:6; யூதா 3ஐயும் காணவும்) இருப்பதினால் ஆரோக்கியமான உபதேசத்தைக் கைக்கொள்ள உதவுவதை நோக்கமாகக் கொண்டு இருந்தது. குறிப்பிட்ட மனிதர்களுக்கு, "வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும் ... கட்டுக் கதைகளையும் முடிவில்லாத வம்ச வரலாறுகளையும் கவனியாத படிக்கும்'' (1:3) கட்டளையிட வேண்டுமென்று அவருக்குப் பவுல் அறிவுறுத்தினார். அவர், "சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக் கதைகளுக்கு" (4:7) விலகியிருக்க வேண்டியிருந்தது மற்றும் "ஆரோக்கிய மான வசனங்களை ... ஒப்புக் கொள்ளாதவர்களை'' மறுத்துரைக்க வேண்டியிருந்தது (6:3).*

இந்த நிருபமானது ஒருவருடைய பேச்சைப் பற்றி மட்டுமின்றி ஒருவருடைய நடையைப் பற்றியும் எடுத்துரைப்பதாக உள்ளது. இது, ஒரு சுவிசேஷகர் "ஜீவனுள்ள தேவனுடைய சபையாகிய, தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை"(3:14, 15)க் குறித்து அவரை வழிநடத்துவதற்காக எழுதப்பட்டது.

விசுவாசத்திலிருந்து வழுவிப்போகக் கூடிய மக்களைப் பற்றிய ஒரு தெளிவான எச்சரிக்கையையும் பவுல் இந்த நிருபத்தில் உள்ளடக்கினார். ஏற்கனவே சிலர் "(தங்கள்) விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தி" (1:18-20) இருந்தார்கள். குறிப்பாக, சில பெண்கள் தங்கள் ஆதி விசுவாசத்தைப் புறக்கணித்திருந்தார்கள் (5:12). சிலர் - சீர்கேடான வீண் பேச்சுக்கள் மற்றும் ஞானமென்று பொய்யாய்ப் பெயர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்கள் ஆகியவற்றின் காரணத்தினால் "விசுவாசத்தை விட்டு வழுவிப்" போயிருந்தார்கள் (6:20, 21). பவுலின் கூற்றுப்படி மற்றவர்கள் (பலரும்) எதிர்காலத்தில் வழுவிப்போவார்கள் (4:1-3).

ஆகையால் தீமோத்தேயுடன் சேர்ந்து எல்லா சுவிசேஷகர்களும், "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக் கொண்டு" (6:20) இருக்க வேண்டும் என்றும் "விசுவாசத்தில் உத்தம குமாரனாக" (1:2) இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகின்றனர். இது சுவிசேஷகர்களுக்கு உண்மையிலேயே வளமூட்டுகின்ற, நடைமுறைக்கு உகந்த மற்றும் வல்லமை நிறைந்த நிருபமாக உள்ளது.[2]

## பெறுபவர்

பவுல் நிருபத்தை எழுதிய இந்த இளம் சுவிசேஷகரைப் பற்றி நாம் அறிவது என்ன? பவுல் தீமோத்தேயுவை, "விசுவாசத்தில் (எனது) உத்தம குமாரன்" (1:2) என்றும், "பிரியமுள்ள குமாரன்" (2 தீமோ. 1:2) என்றும் விவரித்தார். பவுலினால் கூறப்பட்ட இந்த பிரியமான மற்றும் விசுவாசம் தொடர்பான விளக்கங்கள் பவுலின் அன்புமிக்க உடன் ஊழியர்களில் ஒருவரை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. "தீமோத்தேயு மிகவும் குறிப்பிடத்தக்க நபராய் இருந்தார் ... அவரது பண்பானது அன்புள்ளம் மற்றும் விசுவாசம் நிறைந்த தன்மை ஆகியவற்றின் கலவையாக இருந்தது ... பவுல் தீமோத்தேயுவை அன்புகூர்ந்து, அவரது தனிச் சிறந்த ஆளுமைப் பண்புகளைப் பாராட்டினார்."[3]

## காலம் மற்றும் இடம்

இந்த நிருபமானது எப்பொழுது மற்றும் எங்கிருந்து எழுதப்பட்டது என்ற கேள்விக்குப்பதில் அளிக்க, இந்நிருபத்தை எழுதியதிலிருந்து பவுலின் மரணம் வரையிலும் அவரது வாழ்வு மற்றும் பயணங்கள் பற்றிய இதர விவரங்களைக் கண்ணோக்குதல் என்பது மிகச் சிறந்ததாகக் காணப் படுகின்றது. பவுல் தீமோத்தேயுக்கு எழுதிய இரு நிருபங்களிலும், மற்றும் அவர் தீத்துவுக்கு எழுதிய நிருபங்களிலும் எடுத்துரைக்கும் அவரது பயணத்

*திட்டங்கள் எதுவும் அப். நட. புத்தகத்தில் பவுலின் வாழ்வு பற்றி லூக்கா தரும் விவரங்கள் எதனுடனும் பொருந்தி வரவில்லை. நடபடிகளில் பவுலின் பயண அமைவுகள் மற்றும் தீமோத்தேயு, தீத்து நிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு மெரில் C. டென்னீ அவர்கள் மிகச் சிறந்த ஒப்பீடு ஒன்றைக் கொடுத்தார்.[4] நடபடிகளின்படி, பவுல் மெக்கதோனியா வழியாகச் சென்ற பொழுது (1:3; அப். 20:4-6ஐக் காணவும்) தீமோத்தேயுவை எபேசுவுக்கு அண்மையில் விட்டுச் சென்றிருக்க முடியாது. பிலேமோன் 24ல் தேமா ஒரு ஊழிக்காரராகக் குறிப்பிடப் பட்டார், ஆனால் அவர் 2 தீமோ. 4:10ன்படி பவுலைப் புறக்கணித்துச் சென்றிருந்தார். நடபடிகளில் லூக்காவின் பதிவின்படி, பவுல் கிரேத்தா வுக்குச் சென்றிருக்கவில்லை, அது தீத்து 1:5ன்படி அவரது பயண அமைப்பா யிருந்தது. டென்னீ அவர்கள் கூடுதலாக உற்சாகமுள்ள ஒப்பீடுகளைக் கொடுத்தார். தியோடர் சாண் அவர்கள் பின்வரும் கேள்வியை எழுப்பி னார்: “பவுல் சிறையில் இருந்த பொழுது, ஸ்பானியா நாட்டுக்குச் செல்ல விருப்பமாயிருந்த நிலையில், அவர் ரோமாபுரியிலேயே தொடர்ந்து தங்கியிருந்திருப்பாரேயானால், அவர் தமது ஓட்டத்தை முடித்திருந்ததாகக் கூறியிருக்க முடிவது எவ்வாறு?” (ரோமர் 15:24-28; 2 தீமோ. 4:7, 8; அப். 28ல் உள்ளபடி.)[5]*

*ஒரு நிகழ்வை நாம் ஏற்றுக் கொண்டால், எல்லாம் சீர் பொருந்து கின்றன: நடபடிகளில் லூக்கா தந்த விவரங்களுக்குப் பிறகு பவுல் சிறையி லிருந்து விடுவிக்கப்பட்டார். பின்பு, அவர் ரோமாபுரியில் மீண்டும் சிறைப் பிடிக்கப்பட்டு தனது பூமிக்குரிய பயணத்தை முடிக்கு முன்பு தமது ஓட்டத்தை தொடர்ந்து முடித்திருக்க அவருக்குச் சாத்தியப்பட்டிருக்கும்.*

*ரோமாபுரியில் பவுலின் முதலாம் சிறையிருப்பு தொடங்கி அவரது மரணத்திற்கு நெருங்கிய காலம் வரையிலும் அவரது பயண அமைப்பைக் கண்டறியும் முயற்சியாகப் பின்வரும் ஆய்வு உள்ளது. ஒவ்வொரு கருத்தின் அடிப்படையையும் ஏவுதல் பெற்ற பதிவேடு தொடுவதில்லை. ஆகையால், இந்தத் தகவலானது, ஏவுதலினால் நாம் பெற்றுள்ள பகுதிகளை ஒன்று கூட்டி இணைப்பதற்காகத் தரப்படுகின்றது, ஆனாலும் இந்த “நிறைவு செய்யும்” முயற்சிகள் மனிதரிடமிருந்து தோன்றியவை என்பதும் இவை தவறுவதற்குச் சாத்தியமுள்ளவைகள் என்பதும் முழுமையாய் அறியப் பட்டே தரப்படுகின்றது.*

*பவுல் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டது எந்த வேத வசனத்துடனும் முரண்படுவதில்லை. பவுலின் வாழ்வின் முடிவு வரை நடபடிகள் தொடருகிறது என்று லூக்கா உரிமை கோரவில்லை (அப். 28:30, 31). பவுல் தாம் விடுதலையாவதை எதிர்நோக்கியிருந்ததாகச் சுட்டிக் காண்பித்தார் (பிலி. 2:24ஐக் காணவும்). அவர் தாம் தங்குவதற்கு ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணும்படி பிலேமோனிடம் கேட்குமளவுக்குச் சென்றார் (பிலே. 22). பவுல் விடுவிக்கப்பட்ட போது அவர் எங்கு சென்றார்? பின்வரும் அட்டவணை அந்த நிகழ்ச்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியாக உள்ளது:*

1. *தமக்கு என்ன நடக்கும் என்பதைப் பவுல் கண்டறிந்த உடனே,*

*தீமோத்தேயுவைப் பிலிப்பி நகருக்கு அனுப்பினார் (பிலி. 2:19-23).*

2. *பவுல் விடுதலை செய்யப்பட்டு, சிறிய ஆசியா மற்றும் மக்கெதோனியாவுக்குத் தமது திட்டமிட்ட பயணத்தைத் தொடங்கினார். அவர் ரோமாபுரியிலிருந்து பயணம் செல்லுகையில் தீத்து விடப் பட்டிருந்த இடமான கிரேத்தா(தீ)வுக்கு வந்தார் (தீத்து 1:5).*
3. *தமது பயணத்தைத் தொடர்ந்த பவுல், பிலேமோனைச் சந்தித்து அவரிடம் ஒநேசிமுவைப் பற்றிய விஷயத்தை (பேசித்) தீர்ப்பதற்காக சிறிய ஆசியாவுக்குச் சென்றார் (பிலே. 10-22). இது கொலோசேயில் நடைபெற்றது (கொலோ. 4:9). பவுல் கொலோசே செல்லும் வழியில் (எபேசுவின் அருகில் இருந்த) மிலேத்து வழியே சுலபமாய்க் கடந்து சென்றிருக்கக் கூடும்.*
4. *பவுல் மிலேத்துவுக்குத் திரும்பி வந்து, அங்கு (பவுலின் வேண்டுகோளின்படி பிலிப்பி நகருக்குச் சென்றிருந்த) தீமோத்தே யுவைச் சந்தித்து, பின்பு அவர் (பவுல்) எபேசுவுக்குச் சென்றார் (வழியில் அவர் துரோவாப்பட்டணத்தில் சற்றுத் தாமதித்திருக்கலாம்). அப். 20:25ன் காரணத்தினால் பவுல் (எபேசு வுக்குப் பதில்) மிலேத்துவில் தீமோத்தேயுவைச் சந்தித்திருக்கலாம் என்பது தேர்ந்து கொள்ளப் படுகின்றது. எபேசுவிலிருந்து வந்த (மிலேத்துவில் அவர் சந்தித்திருந்த) மூப்பர்களிடத்தில் பவுல் முன்பே, "நீங்கள் எல்லாரும் இனி என் முகத்தை பார்க்க மாட்டீர்கள் என்று அறிந்திருக்கிறேன்" என்று கூறியிருந்தார். அவர் (எபேசு) சென்றார் ஆனால் காலம் அல்லது சூழ்நிலையினால் அங்கிருந்த மூப்பர்களில் எவரையும் காண முடியாதவாறு தடை செய்யப்பட்டார் என்ற கருத்தைக் காட்டிலும் பவுல் எபேசுவுக்குச் செல்லவில்லை என்ற கருத்தே ஏற்புடையதாக உள்ளது. பவுல் தீமோத்தேயுவிடமிருந்து ஒரு செய்தியைப் பெற்றார் (பிலி. 2:19-24) மற்றும் பிலிப்பி நகருக்குத் திரும்பினார், தீமோத்தேயுவை எபேசுக்குத் திரும்பிச் சென்று அங்கே தங்கியிருக்கும்படி கூறினார். தீத்து 1:5ஐப் போலின்றி, 1 தீமோ. 1:3 வசனமானது பவுல் தீமோத்தேயுவை எபேசுவில் ஊழியத்தை முடிக்குமாறு விட்டுச் சென்றார் என்று கூறுவதில்லை.*
5. *மெக்கெதோனியாவில் இருக்கையில் பவுல், 1 தீமோத்தேயு நிருபத்தை எழுதினார், அதில் அவர் எபேசுப் பகுதிக்கு விரைவில் திரும்பி வருவதாக நம்பிக்கை தெரிவித்திருந்தார், ஆனால் தாம் தாமதிக்க நேரிடும் என்பதை(யும்) அறிந்திருந்தார் (3:14, 15; 4:13).*
6. *பிற்பாடு, பவுல் மெக்கெதோனியாவில் (பெரும்பாலும் பிலிப்பியில்) இருந்து தீத்துவுக்கு எழுதினார், மற்றும் அவர் தமது பயணத் திட்டங்களை மாற்றியிருந்தார். தீத்து தம்முடன் நிக்கொப்போலியில் (அயோனியன் கடலின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள எப்பிரஸில்) இணைந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார், மற்றும் அவர் (பவுல்) குளிர் காலத்தில் அங்கு தங்கியிருக்க முடிவு செய்தார். கிரேத்தாத் தீவில் (தீத்து 3:12) ஊழியத்தை (தொடர்ந்து) செய்யும்படி அர்த்தெமா அல்லது தீகிக்குவை*

*அனுப்புவதாக அவர் வாக்களித்தார் (அல்லது குறைந்தபட்சம், நம்பிக்கையாயிருந்தார்) (எபே. 6:21, 22; கொலோ. 4:7, 8).*

7. *பவுல் தாம் செய்ய விரும்பியபடியே ஸ்பானியாவுக்குத் தமது பயணங்களைத் தொடர்ந்தார் என்று கணிசமான அளவு புறம்பான ஆதாரங்கள் ஆலோசனை அளிக்கின்றன. (ரோமர் 15:24, 28ஐக் காணவும்.)*[6]
8. *கொடுக்கப்பட்ட ஆதாரத்தின்படி, பவுல் ஸ்பானியா நாட்டில் பயணம் செய்த பிறகு, சிறிய ஆசியாவுக்குத் திரும்பினார், கொரிந்துவில் சற்றுத் தாமதித்து, அங்கு எரஸ்துவை விட்டுச் சென்றார். பின்பு அவர் துரோவாவுக்குச் சென்றார் (2 தீமோ. 4:13, 20) அங்கு தமது மேலங்கியையும் தோல் சுருள்களையும் கார்ப்பு என்பவர் வசமாய் விட்டுச் சென்றார். அங்கிருந்து அவர் மிலேத்துவுக்குச் சென்றிருக்க வாய்ப்புண்டு, அங்கு துரோப்பீமுவை வியாதிப்பட்டவராக விட்டுச் சென்றார் (2 தீமோ. 4:20).*
9. *மிலேத்துவிலிருந்து ரோமாபுரிக்குச் செல்லும் வழியில் ஏதோ ஓரிடத்தில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டு, சிறிய ஆனால் கடுமையான சிறைத்தண்டனைக்கு உட்பட்டார் (2 தீமோ. 1:16, 17; 2:9; 4:14-18). அவர் தமது வாழ்வின் முடிவு சமீபித்திருந்தது என்று எதிர்பார்த்தார் (2 தீமோ. 4:6-8). தனிமையில், குளிர் காலத்திற்கு முந்தி தீமோத்தேயு திரும்பி வருவார் என்று எதிர் பார்த்தார் (2 தீமோ. 4:9-11, 21). அவர் உலகப்படியாகக் கடினமான சூழ்நிலைகளை அதிகமாய் அறிந்திருந்தாலும், அவரது ஆவி அவருக்குள் மிகுந்த தைரியத்துடன் இருந்தது (2 தீமோ. 4:18; 2 கொரி. 4:16-5:1; பிலி. 1:21, 23ஐக் காணவும்).*

*(மேலே தரப்பட்டுள்ள கணக்கீடுகளின் காரணத்தினால்) 1 தீமோத்தேயு நிருபம் எழுதப்பட்ட காலம் கி.பி. 63 அல்லது 64 என்று பொதுவாக நினைக்கப்படுகிறது, இதற்குச் சற்றுப் பின்பு தீத்துவுக்கு நிருபம் எழுதப்பட்டிருக்கலாம். இவ்விரு நிருபங்களுமே மெக்கதோனியாவில் ஏதோ ஓரிடத்திலிருந்து எழுதப்பட்டன.*

## ஆய்வுப் பொருள்

*1 தீமோத்தேயு நிருபத்தின் ஆறு அதிகாரங்களிலும், தேவனுடைய வசனத்திற்கு பல்வேறு இயற்பெயர்களின் கீழ் பல குறிப்புகள் அடங்கியுள்ளன ("தேவனுடைய வசனம்"; "சத்தியம்"; "வேத வாக்கியம்"). மேலும், தீமோத்தேயு கடைப்பிடிக்க வேண்டிய குறிப்பான கட்டளைகளும், புத்திமதிகளும் மற்றும் ஆணைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தீமோத்தேயு செயல்படுத்த வேண்டிய ஊழியம் பற்றிய பலத்த வலியுறுத்தலும் மற்றும் அவரது வழிகாட்டி என்ற வகையில் வேதவாக்கியங்களின் பயன்பாடும் இந்தப் படிப்பின் ஆய்வுப் பொருளை விளக்கப்படுத்துகின்றன: சகலத்திலும் நிறைவான தேவனுடைய வசனத்துடன் சுவிசேஷகரின் வாழ்வு.*

*இந்த வசனமானது, எல்லாரையும் இரட்சிக்க விரும்புகின்ற (2:3, 4) தேவனிடத்திலிருந்து வந்துள்ள நித்திய உடன்படிக்கையாய் (எபி. 13:20, 21) இருப்பதாலும், இந்த தெய்வீகத் திட்டமானது அந்த வசனத்தைப் பிரசங்கிக்கின்ற பிரசங்கியார்கள் மூலமாகச் செய்யப்பட வேண்டியதா யிருப்பதாலும் (4:13-16; 1 கொரி. 1:21), 1 தீமோத்தேயு நிருபமானது ஒவ்வொரு சுவிசேஷகருக்கும் மற்றும் ஆழ்ந்து சிந்திக்க விரும்புகின்ற ஒவ்வொரு நபருக்குமானதாக உள்ளது. இது "ஜீவனுள்ள தேவனுடைய சபையாகிய" தேவனுடைய குடும்பத்தில் (3:14, 15) உண்மையுடன் வாழும் யாவருக்கும் காலத்திற்கேற்ற மற்றும் காலம் கடந்து நிற்கும் செய்தியாக உள்ளது. இந்த நிருபமானது, கிறிஸ்தவர்கள் (தங்கள்) எஜமானருக்கென்று எவ்வாறு வாழ வேண்டியவர்களாய் உள்ளனர் என்பது பற்றியதாக இருக்கிறது (4:6-16).*

*படிப்பின் எந்த வகையிலும், எழுத்தாளரால் பயன்படுத்தப்பட்ட தகுதிப் பெயர்ச் சொற்களின் - மக்கள், இடங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றின் பெயர்களின் - அர்த்தங்களை அறிவது என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. இதுவே, வரலாறு அல்லது அறிவுறுத்தல் கட்டியெழுப்பப்படக் கூடிய சட்டகப் பணியமைப்பாக உள்ளது. வேறு எந்தத் துறையைக் காட்டிலும் வேதாகமப் படிப்பில் இதற்குக் குறைவான முக்கியத்துவம் இருப்பதில்லை. 1 தீமோத்தேயு நிருபத்தை நாம் படிக்கும் முன்னர், இந்த நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள், இடங்கள் மற்றும் அடிக்கடி குறிப்பிடப்படும் கருத்துக்கள் ஆகியவற்றை கண்ணோக்குவோம்.*

## *1 தீமோத்தேயு நிருபத்தில் குறிப்பிடப்படும் மக்கள்*

### தீமோத்தேயு

*"விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிற தாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக" (1:2).*

*தீமோத்தேயு பதினைந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளாகப் பவுலின் மாணவராக, நண்பராக, மற்றும் உயர்வாக மதிக்கப்பட்ட உடன் ஊழியராக இருந்தார். இரண்டு நிருபங்களிலும் பவுல் தீமோத்தேயுவை, "விசுவாசத்தில் உத்தம குமாரன்" (1:2), "எனது குமாரன்" (1:18; 2 தீமோ. 2:1) மற்றும் ''எனது பிரியமுள்ள குமாரன்'' (2 தீமோ. 1:2) என்று குறிப்பிட்டார். நடபடிகளில் அவரது பெயர் ஆறு முறை தோன்றுகின்றது.[7] பவுலும் சீலாவும் இரண்டாம் ஊழியப் பயணத்தில் லீஸ்திராவை அடைந்த பொழுது, அங்கு முதன் முதலாக இவர் (தீமோத்தேயு), "ஒரு சீஷன்" என்று குறிப்பிடப்படுகின்றார் (அப். 16:1). அந்த வேளையிலிருந்து தீமோத்தேயு, பவுல் மற்றும் சீலாவுடன் பயணம் செய்யத் தொடங்கினார்.*

*தீமோத்தேயு ஒரு யூதத் தாய்க்குப் பிறந்த யூதராயிருந்தார், அவரது தகப்பனார் ஒரு புறஜாதியார் என்பது பரவலாய் அறியப்பட்டிருந்தது. ஆகையால், ஆபிரகாமுடனான உடன்படிக்கையின்படி (ஆதி. 17) அவர் விருத்தசேதனம் செய்து கொள்ளாதிருந்தால் யூதர்கள் மத்தியில் ஊழியம் செய்யும் சுதந்திரம் அவருக்கு மறுக்கப்பட்டிருக்கும். மதரீதியான காரணங்களுக்காக அல்ல, ஆனால் இனரீதியான காரணங்களுக்காகவே பவுல் இந்த இளம் யூதக் கிறிஸ்தவருக்கு விருத்தசேதனம் செய்வித்தார்.*[8]

*தெசலோனிக்கே மற்றும் பெரோயா பகுதியை விட்டுப் பவுல் செல்ல வேண்டியதாயிருந்த பொழுது, தீமோத்தேயு சீலாவுடன் அங்கேயே இருந்து விட்டார், இவ்விருவரும் வெகுவிரைவில் பவுலை அத்தேனே பட்டணத்தில் சந்திப்பது என்று ஏற்பாடு செய்து கொண்டனர் (அப். 17:14, 15). திட்ட மிட்டபடி அவர்கள் அத்தேனே சென்றடையத் தவறிய பொழுது, பவுல் கலக்கமுற்றார், ஆனால் அவர் கொரிந்து நகருக்குச் சென்றார், அங்கு கடைசியில் இந்த இரு இளைஞர்களும் மக்கெதோனியாவில் இருந்த சபைகளின் நிலமை பற்றிப் பவுலை ஆறுதல்படுத்த வந்து சேர்ந்தனர் (அப். 18:5). பிற்பாடு, தீமோத்தேயு எரஸ்துவுடன் எபேசுவிலிருந்து மெக்கெ தோனியாவுக்கு அனுப்பப்பட்டார் (அப். 19:22), அதன் பிறகு அவர் பவுலுடன் கிரேக்க நாட்டில் இருந்தார்.*

*பவுல் பலஸ்தீனத்திற்கு கடல் வழியாக உடனடியாகப் புறப்பட்டுச் செல்ல வேண்டியிருந்த பொழுது, அவருக்கு எதிரான சூழ்ச்சியொன்று கண்டு பிடிக்கப்பட்டது. ஆகையால், ஏஜியன் கடலைக் கடந்து துரோவா வுக்குச் செல்லும்படி தீமோத்தேயு மற்றவர்களுடன் முன்னதாக அனுப்பப் பட்டார். அந்த இடத்தில் குழுவானது பவுலுடன் மீண்டும் இணைந்தது (அப். 20:4-6).*

*பவுல், பிலிப்பியில் இருந்த சபைக்கு எழுதிய நிருபத்தில் தீமோத்தேயு வுக்கு உயர்ந்த பாராட்டு ஒன்றைச் செலுத்தினார்: அவர், "அதேனென்றால், உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி (தீமோத்தேயுவையன்றி) வேறொருவனும் என்னிடத்திலில்லை" (பிலி. 2:20) என்றெழுதினார்.*

*பவுலின் வாழ்நாளில் கடைசி - நாட்களில் இல்லாவிட்டாலும் - வாரங்களில், தீமோத்தேயு ரோமாபுரி வந்தடைவதைக் காணுவதே அவருடைய மாபெரும் விருப்பமாய் இருந்தது. அவர் பவுலின் சொந்த உடமைகள் சிலவற்றைக் கொண்டு வரவும், பவுலிடம் எதிர்காலத்திற்கான அறிவுறுத்தல்களைப் பெறவும் வேண்டியிருந்தது (2 தீமோ. 4:13).*

## இமெனேயும் அலெக்சந்தரும்

*"இமெனேயும் அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக் கொடுத்தேன்" (1:20).*

*அவர்கள் எபேசுவில் இருந்த கள்ள போதகர்கள். பவுல் அவர்களைச் சாத்தானிடம் ஒப்புக்கொடுத்தார். அவர்கள் "தூஷியாதபடி சிட்சிக்கப்*

படுவதற்காக'' ஐக்கியத்திலிருந்து நீக்கப்பட்டனர். உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என போதித்த பிலேத்துவுடன் தொடர்புடைய வகையில் இமெனே என்பவர் 2 தீமோத்தேயு 2:17, 18ல் கூடக் குறிப்பிடப்படுகின்றார்.

### ஆதாமும் ஏவாளும்

*"என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்" (2:13).*

ஆதாம், ஏவாளுக்கு முன்பாகவே உருவாக்கப்பட்டார். ஆகையால் அவர் தலைமைத்துவத்தில் முன்னுரிமை கொண்டிருந்தார், மற்றும் அவள் அவருடைய தலைமைத்துவத்தின் கீழிருந்தாள். பெண் என்பவள் பொதுவாக ஆணின் தலைமைத்துவம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் கீழ் இருக்க வேண்டும் என்று நோக்கங் கொள்ளப்பட்டது.

### பொந்திய பிலாத்து

*''எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலேயும், பொந்திய பிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப் பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன்" (6:14).*

அவர் திபேரியு இராயனின் ஆளுகையின் போது பலஸ்தீனத்தின் ஆளுநராய் இருந்தார். இயேசு, குடிகளை ஆளும் அரசாங்கத்தினிடம் எதிர்ப்பை மறுத்த அதே வேளையில், தம்முடைய தெய்வீகத்தையும் அரசத்துவத்தையும் அறிக்கையிட்டதை பிலாத்து கேட்டிருந்தார் (யோவா. 18:35-37). இயேசுவின் இந்த அறிக்கையைப் பவுல் "நல்ல அறிக்கை" என்று பெயரிட்டு, அதை இயேசுவின் பின்பற்றாளர்களுக்கு ஒப்புவித்தார்.

## 1 தீமோத்தேயுவில் குறிப்பிடப்படும் இடங்கள்

*"வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கு ... நீ சிலருக்குக் கட்டளையிடும் பொருட்டாக நான் மக்கெதோனியாவுக்குப் போகும் போது உன்னை எபேசு பட்டணத்திலிருக்க வேண்டிக் கொண்டபடியே செய்வாயாக" (1:3).*

### எபேசு

எபேசு நகரில் இருந்த பொழுதுதான் தீமோத்தேயு பவுலிடமிருந்து இரு நிருபங்களையும் பெற்றுக் கொண்டார். இது வர்த்தகத்தில் மாபெரும் முக்கியத்துவமுள்ள நகராயிருந்தது. உண்மையில் அது கடற்கரையிலிருந்து சில மைல்கள் தொலைவிலேயே இருந்தது, அதே வேளையில் இந்நகரானது பழங்கால உலகின் மாபெரும் கடல் துறைமுகங்களில் ஒன்றாகவும் இருந்தது. கேயிஸ்டர் நதியானது ஏஜியன் கடலில் கலக்குமிடத்தில் இந்நகர் அமைந்திருந்தது. கடல் போக்குவரத்தானது கேயிஸ்டர் நதியின் மூலம்

இந்நகரை அடைந்தது.

மூன்று பெரிய நெடுஞ்சாலைகள் எபேசுவில் சந்தித்தன. (1) ஐப்பிராத்து சமவெளியிலிருந்து கொலோசே, லவோதிக்கேயா வழியாக வந்த சாலை, (2) கலாத்தியாவிலிருந்து சர்தை வழியாக வந்த சாலை, மற்றும் (3) மீண்டர் சமவெளியிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் சாலை.

எபேசு நகரமும் மாபெரும் அரசியல் முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. இது ரோமாபுரியின் "சுதந்திரமான நகரமாய்" இருந்தது, இது அங்கு படைப் பணிக்குழுக்கள் எதுவும் அமர்த்தப்பட்டிருந்ததில்லை என்றும், நகரானது பெரும்பாலும் சுயாதீனமான ஆளுகையுடையதா யிருந்தது என்றும் அர்த்தப்படுத்திற்று. இது "ஆசியாவின் மேன்மையான பெருநகரம்" என்று அழைக்கப்படுமளவுக்கு உயர் மதிப்பைக் கொண்டிருந் தது, எபேசு நகர் அதற்கென்றே சொந்தமாக நீதிபதிகளைக் கொண்டிருந்தது, இவர்கள் strategoi என்று அழைக்கப்பட்டனர், மற்றும் இங்கு Boule என்றழைக்கப்பட்ட தேர்வு செய்யப்படும் நகர் மன்றக்குழு ஒன்றும் இருந்தது. குடிமக்களின் குழு ஒன்று ekklesia என்று குறிப்பிடப்பட்டது - இந்த வார்த்தையே தற்செயலாக புதிய ஏற்பாட்டில் "church" (சபை) என்று மொழிபெயர்க்கப்பட்டது. இருப்பினும், அப். 19ன் கடைசி வசனத்தில் நகரச் சம்பிரதியினால் கலைக்கப்பட்ட இடத்தில் இக்குழுவின் பெயர் "கூட்டம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எபேசு நகரானது ''முறையான விசாரணையின் நகர்'' என்று அழைக்கப்பட்டது, இது ஆளுநருக்கு அனுப்பப்பட்ட சட்டரீதியான வழக்குகள் இங்கு விசாரிக்கப்பட்டன என்று அர்த்தப்படுகின்றது. மற்றும் Pan-Ionian என்ற விளையாட்டுகள் எபேசு நகரில் ஒவ்வொரு மே மாதத்திலும் நடத்தப்பட்டன. "Asiarchs" என்று அறியப்பட்ட மாகாண (மாநில) அதிகாரிகள் இந்த விளையாட்டுகளுக்கு ஏற்பாடு செய்து, அவைகளுக்கான செலவையும் செலுத்தி வந்தனர்.

எபேசு நகரானது மதரீதியாக மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பெரும்பாலான மக்கள் அறிந்துள்ளனர். மிகவும் தொடக்ககால வரலாற்றிலிருந்தே இங்கு ஒரு கோவில் இருந்துள்ளது. முதல் கோவிலைக் கட்டியவர் யாரென்று அறியப்படவில்லை. இரண்டாவது மாபெரும் கோவிலானது, லிடியா என்றழைக்கப்படும் பகுதியை ஆண்டு கொண்டிருந்த செல்வந்தரான குரோயிஸஸ் என்ற அரசரின் உதவியுடன் ஆசியாவின் நகரங்களினால் கட்டப்பட்டது. இந்த இரண்டாவது கோவிலானது கி.மு. சுமார் 365ல் மகா அலெக்சாண்டர் பிறந்த இரவில் எரிக்கப்பட்டது. மூன்றாவது கோவில்தான் நாம் வேதாகமத்தில் இருந்து அறியும் கோவிலாகும். இது கிரேக்கப் பெண் தெய்வமான ஆர்ட்டெமிஸ் என்பவளுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருந்தது, இவள் ரோமர்களால் தியானாள் என்று அறியப்பட்டிருந்தாள். உலக வரலாற்றில் இந்தக் கோவிலானது பழங்கால உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக நினைவு கூரப்படுகின்றது.

ஆர்ட்டெமிஸின் இந்தக் கோவிலானது இன்றைய நாட்களிலும் பெரிய கட்டிடங்களை வழக்கமாய் பார்க்கும் மக்களை வசீகரிப்பதாய் இருக்கும்.

இது 127 தூண்களை ஆதாரமாய்க் கொண்டது, அவை ஒவ்வொன்றும் ஒரு அரசரின் வெகுமதியாய் இருந்தது. அவைகளில் 36 தூண்கள் சிற்ப வேலைப்பாடுள்ளவையாகவோ அல்லது விலையுயர்ந்த உலோகங்களும் கற்களும் பதிக்கப்பட்டவையாகவோ இருந்தன. கட்டிடமானது 425 அடிகள் நீளமும், 220 அடிகள் அகலமும் மற்றும் அறுபது அடிகள் உயரமும் கொண்டிருந்தது! அதன் கூரையானது மதிப்பு மிக்கதும் அழிவை எதிர்த்து நிற்பதுமாயிருப்பதற்குக் குறிப்பிடப்படும் கேதுரு மரங்களும், அதன் கதவுகள் சைப்ரஸ் மரங்களாலும் செய்யப்பட்டிருந்தன.

இந்த மாபெரும் கோவிலுக்குள், ஆர்ட்டெமிஸின் உருவம் என்று புறதெய்வ வணக்கத்தாரால் நம்பப்பட்ட ஒரு சிலை இருந்தது. அது வானத்திலிருந்து விழுந்ததென்று கூறப்பட்டது, மற்றும் கறுப்பாய் இருந்ததாக விவரிக்கப்பட்டது, எனவே அது ஒரு விண் கல்லாய் இருந்திருக் கலாம். அது உருண்டை வடிவங்கள் (விண்கல்லின் குமிழ்கள்?) கொண்ட, அமர்ந்திருக்கும் உருவமாக இருந்தது. ஆர்ட்டெமிஸ் என்பவள் வளமை யின் பெண் கடவுளாய் இருந்ததால், அந்தக் "குமிழ்கள்" பல மார்பகங்கள் என்று மக்கள் நினைத்தார்கள். அந்த உருவம் ஒரு கையில் தடி ஒன்றையும் இன்னொரு கையில் திரிசூலம் ஒன்றையும் ஏந்திக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது, மற்றும் அதன் அடித்தளத்தில் வினோதமான இரகசிய அடையாளங்கள் செதுக்கப்பட்டிருந்தன.

எபேசு நகரின் வாழ்வில் ஆர்ட்டெமிஸின் கோவிலினுடைய முக்கியத்துவத்தை அதிகமாய் வலியுறுத்துதல் என்பது கடினமான தாயிருக்கும். கோவிலானது ஆராதிக்குமிடமாகவும், புகலிடமாகவும் (அதாவது, விசாரணைக்குட்படாமல், கைது செய்யப்படாமல் தப்பிக்கும் கைதிகள் கோவிலுக்குள் வந்து விட்டால் அங்கு அவர்களைக் கைது செய்யக் கூடாதிருந்தது) இருந்தது. மற்றும், அது, நவீன கால வங்கிகள் செயல்படுவது போல, மதிப்பு மிக்க பொருட்களைப் பாதுகாக்கும் இடமாகவும் செயல் பட்டது. ஒருவருடைய உடமைகளைக் கடவுள்களே காப்பாற்ற முடியா விட்டால், வேறு யார் காப்பாற்ற முடியும்? எபேசுவின் விஷயத்தில் கோவிலானது ஒரு வர்த்தக இடமாகவும் இருந்தது. ஆர்ட்டெமிஸின் உருவத்தைத் தாங்கியிருந்த அடிப்பீடத்தில் பொறிக்கப்பட்டிருந்த புகழ்பெற்ற "எபேசிய எழுத்துக்களின்" பிரதிகள் நல்லதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும் என்று நம்பி மக்கள் அவற்றை வாங்கிக் கொண்டு சென்றனர்.

எபேசு நகரானது உலகின் மிகுந்த மூட நம்பிக்கை நிறைந்த நகர்களில் ஒன்றாக இருந்தது. உலகிற்கு அப்பாற்பட்ட அறிவின் மீதான செயல் படுத்தும் நம்பிக்கையை/மந்திரவாத வித்தையை நடைமுறைப்படுத்துபவர் கள் அதன் குடிகள் மத்தியில் இருக்குமளவுக்கு அந்த நம்பிக்கையானது ஆழமாய் வேரூன்றியிருந்தது (அப். 19:18-20).

தீமோத்தேயுவின் ஊழியமானது எபேசியரின் பண்பினால் உறுதியாகவே பாதிக்கப்படுவதாக இருந்தது. அவர்கள் ஆசியா முழுவதிலும் புத்தி மாறாட்டமும், ஒழுக்கவீனமும் மற்றும் மூடநம்பிக்கையும் நிறைந்தவர்களென்று அறியப்பட்டிருந்தார்கள். "அழுகின்ற தத்துவ ஞானி"

*எனப்படுபவரான அந்நகரின் குடிமகனாயிருந்த ஹெராகிளிட்டஸ் என்பவர் எபேசுவின் கொடுமைத்தனத்தினால் தான் ஒருபோதும் புன்முறுவல் செய்திருந்ததில்லை என்று கூறினார். அந்தக் கோவிலின் ஒழுக்கவீனர்கள் மிருகங்களை விட மோசமான நிலையில் இருந்தார்கள் என்றும் எபேசியர்கள் மூழ்கடிக்கப்படுவதற்கே தகுதியானவர்கள் என்றும் அவர் கூறினார்.*

*கி.பி. சுமார் 53 அல்லது 54ல் பவுலும், ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாலும் கொரிந்துவில் இருந்து பலஸ்தீனம் செல்லும் வழியில் எபேசுவில் தங்கி யிருக்கையில் எபேசு நகர சபை தொடங்கப் பெற்றது. அங்கிருந்த ஜெப ஆலயத்தில் பவுல் யூதர்களுடன் தர்க்கம் செய்தார் (அப். 18:18-21). பிற்பாடு, அந்த சபையில் யூதர்களைக் காட்டிலும் புறஜாதியார் அதிகமாய் இருந்த தாகத் தோன்றுகிறது.*

*சுமார் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு பவுல் அங்கு மீண்டும் வந்த பொழுது, முறையற்ற வகையில் ஞானஸ்நானம் பெற்றிருந்த பன்னிருவரை அங்கு கண்டார். அவர்கள் குறைவுபட்டிருந்தவற்றை அவர்களுக்கு அவர் போதித்து, அவர்கள் ஒவ்வொருவரையும் மறுப்படியும் ஞானஸ்நானம் செய்வித்தார் (அப். 19:1-5). இந்த (அவருடைய மூன்றாவது) ஊழியப் பயணத்தில் பவுல் மூன்று மாதமளவும் ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார். பலத்த எதிர்ப்பு எழும்பிய பொழுது, அவர் திறன்னு என்பவரின் (பள்ளிக் கூட) அறையில் இரு ஆண்டுகள் அளவாகப் போதித்தார் (அப். 19:9, 10).*

*எபேசுவில் பவுல் ஊழியம் செய்த ஈடுபாட்டுடன் இணைந்திருந்த முக்கியத்துவமானது அவர் அங்கு செலவிட்ட கால அளவினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கூடுதலாக, அவர் எபேசுவிலிருந்து கொரிந்தியருக்கு எழுதிய போது பின்வருமாறு கூறினார்: "... இங்கே பெரிதும் அநுகூலமு மான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது ..." (1 கொரி. 16:9). எபேசுவில் இருந்த விசுவாசிகள் ஒரே வேளையில் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசுகள் (சுமார் மூன்றரை இலட்சம் ரூபாய்கள்) மதிப்புள்ள மந்திரவாதப் புத்தகங்களை எரித்தனர் (அப். 19:18-20) என்ற உண்மையினால் அந்நகரில் சுவிசேஷத்தின் செயல்விளைவானது சுட்டிக்காட்டப்படுகிறது.*

*கி.பி. சுமார் 58ல் கடைசி முறையாகப் பவுல் எருசலேமுக்குச் சென்ற பொழுது, வழியில் அவர் எபேசு நகர மூப்பர்கள் தம்மை மிலேத்துவில் வந்து சந்திக்கும்படி அழைத்தனுப்பினார், அதனால் அவர்களுக்கு அவர் எதிர்கால நிகழ்வுகள் பற்றி எச்சரிப்பு அளிக்கவும், அவர்களிடத்தில் பிரியாவிடை கூறிக் கொள்ளவும் முடிந்தது. அவர் அங்கு (எபேசுவில்) மூன்று ஆண்டு களாக ஊழியம் செய்திருந்தார், மற்றும் இந்தத் நடத்துனர்கள் அவருக்கு விலையேறப் பெற்றவர்களாய் இருந்தனர். அவர் பிரிந்து செல்லுமுன்பு அவர்கள் ஒன்றுகூடி ஜெபித்தனர் மற்றும் அழுதனர் (அப். 20:17-38).*

*எபேசிய சபைக்கு முதலாவதாக நிருபம் எழுதப் பெற்ற முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, இன்னொன்று யோவானின் வெளிப்படுத்துதலின் ஒரு பகுதியாக அவர்களுக்கு எழுதப்பட்டது. இந்தக் கடிதமானது எபேசு சபையில் நீடித்த பொறுமை காக்கச் செய்தது எது என்று கூறியது மற்றும் சபையின் உற்சாகமிக்க ஒப்புக்கொடுத்தல் சற்றே பின்வாங்கிப்*

போயிருந்தது என்பதையும் வெளிப்படுத்தியது (வெளி. 2:1-7).

### மக்கெதோனியா

சுருக்கமாகக் குறிப்பிடுவதென்றால், பவுல் தீத்துவுக்கும் மற்றும் தீமோத்தேயுக்கு முதலாவது நிருபத்தையும் இந்த மாகாணத்திலிருந்து தான் எழுதினார் (1:3).

## 1, 2 தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகிய நிருபங்களில் அடிக்கடி குறிப்பிடப்படும் கருத்துக்கள்

### கிருபை

கிருபை என்பது தேவன் தமது அன்பினால் மட்டும் ஆண்கள் மற்றும் பெண்கள் தங்கள் இரட்சிப்பைச் சாத்தியமாக்கிக் கொள்ள அவர்கள் மீது காண்பிக்கின்ற தயவாக உள்ளது, இதைப் பெற அவர்கள் தகுதியுள்ளவர்களாகவோ, பெற வேண்டியவர்களாகவோ அல்லது அதை ஈட்டுபவர்களாகவோ இருப்பதில்லை. இளம் பிரசங்கியார்களுக்குப் பவுல் எழுதிய நிருபங்களில் கிருபை என்பது அடிக்கடி குறிப்பிடப்பட்டது (1 தீமோ. 1:2; 1:14; 6:21; 2 தீமோ. 1:2; 1:9; 2:1; 4:22; தீத்து 1:4; 2:11; 3:7, 15). கிருபையினாலுண்டாகும் இரட்சிப்பு என்பது பவுலின் சிந்தையில் மிகவும் முக்கியமானதாயிருந்தது, எனவே அவர் தமது பிறநிருபங்கள் எல்லாவற்றிலும் விட அதிகமான முறை இந்த நிருபங்களில் தேவனையும், கிறிஸ்துவையும் “இரட்சகர்” என்று குறிப்பிட்டார் (மொத்தம் பத்து குறிப்புகள் உள்ளன, இவற்றில் தீத்து நிருபத்தின் மூன்று அதிகாரங்களில் மாத்திரம் ஆறு குறிப்புகள் உள்ளன).

### நற்கிரியைகள்/நற்செயல்கள்

இந்த மூன்று நிருபங்களில் பவுல், நற்செயல்கள் பற்றிப் பதிமூன்று குறிப்புரைகளை ஏற்படுத்தினார்; அவற்றில் ஏழு குறிப்புரைகள் தீமோத்தேயுக்கு எழுதிய இரு நிருபங்களில் காணப்படுகின்றன (1 தீமோ. 2:10; 5:10 (இருமுறை); 5:25; 6:18; 2 தீமோ. 2:21; 3:17). கிறிஸ்தவர்கள் நல்லவர்களாயிருந்ததினாலோ அல்லது நற்செயல்களைச் செய்திருந்ததினாலோ இரட்சிக்கப்படவில்லை என்றிருக்கையில், அவர்கள் நற்பண்பை நாடும்படியும், நற்செயல்களில் தவறாது ஈடுபடும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அவ்வாறு செய்தல் என்பது இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்றுதலாக உள்ளது. - “நல்ல” என்ற வார்த்தையைப் பவுல் அடிக்கடி பயன்படுத்தினார். மற்ற தொடர்புக் கருத்துக்களிலும் - எடுத்துக்காட்டாக “நல்மனச்சாட்சி” (1 தீமோ. 1:5, 19; எபி. 13:18), “நல்ல போராட்டம்” (1 தீமோ. 1:18; 6:12; 2 தீமோ. 4:7), “நல்ல ஊழியன்” (1 தீமோ. 4:6), மற்றும்

*"நல்ல அறிக்கை" (1 தீமோ. 6:12, 13).*

## இராஜா மற்றும் இராஜ்யம்

*ஒருவேளை, குடிமக்களின் வாழ்வினுடைய ஒவ்வொரு அம்சத்திலும் இராயன் எவ்வாறு அதிகாரத்தை உரிமைகோரினார் என்பதைக் கண்டிருந்தபடியால், பவுல் இயேசுவை "இராஜா" மற்றும் "இராஜாதி இராஜா" (1 தீமோ. 1:17; 6:15) என்று, அடிக்கடி வல்லமை நிறைந்த வகையில் குறிப்பிட்டார், மற்றும் அவரது "இராஜ்யம்" (2 தீமோ. 4:1, 18) நிறைவான இலக்காகவும் வாழ்வின் மதிப்பாகவும் உள்ளதென்றும் குறிப்பிட்டார். அரசு அதிகாரிகளை அவர் ஒருக்காலும் தாக்கியதில்லை (தீத்து 3:1ஐக் காணவும்); உண்மையில், அவர்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார் (1 தீமோ. 2:1, 2). மறுபுறத்தில், அவர் உலக வாழ்வையும் ஆவிக்குரியவற்றையும் பிரித்து வைத்து, அதன் மூலம் கிறிஸ்து ஒருவரே கிறிஸ்தவர்களுக்குள்ளும், அவர்கள் மேலாகவும் ஆளுகின்றார் என்பதைக் கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ளும்படி செய்தார்.*

## இளமை

*பவுல், தாம் பயிற்றுவித்த இளம் மனிதர்கள் தங்கள் இளமையின் காரணமாகத் தங்கள் ஊழியம் எவ்விதத்தில் கண்ணோக்கப்படும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். ஒரு முதிய ஊழியக்காரரைப் போல அவ்விளைஞர்கள் தீவிரமாய்க் கவனிக்கப்பட மாட்டார்கள் என்ற அபாயத்தில் இருந்தனர் (1 தீமோ. 4:12). அப்படிப் பட்ட அவமரியாதையான முயற்சிகளை அவர்கள் கையாளும் விதமானது இடர்ப்பாடுள்ளதாயிருக்கும். அவர்களை மிக வெறுப்புடன் விமர்சிப்பவர் களிடமிருந்தும் கூட மரியாதையை வேண்டி நிற்கும்/மரியாதை அளிக்கும் வகையில் அவர்களின் நடக்கை இருக்கும்படி அவர்கள் வாழவும் பேசவும் வேண்டும் என்று பவுல் அறிவுறுத்தினார் (2 தீமோ. 4:1-5; தீத்து 2:15).*

---

*குறிப்புகள்:*

[1]Albert M. Wells, Jr., *Inspiring Quotations* (Nashville: Thomas Nelson Publishers, 1988), 222. [2]*1 மற்றும் 2 தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகிய நிருபங்களை "மேய்ப்புப் பணி நிருபங்கள்'' என்று பெயரிடும் மாதிரியானது துரதிர்ஷ்டவசமானது. நாம் அறிந்துள்ளபடி, தீமோத்தேயுவோ அல்லது தீத்துவோ மேய்ப்பராக (அல்லது கண்காணியாக, மூப்பராக) ஒருக்காலும் ஊழியம் செய்ததில்லை. இந்த (நிருபத்தின்) பக்கங்களில் மேய்ப்பின் கொள்கைகள் பல ஊடுருவியிருக்கையில், பவுல் ஆன்ட்டன் (1726) மற்றும் தாமஸ் அக்வினாஸ் (1274) ஆகியோர் ''மேய்ப்பர்'' மற்றும் "மேய்ப்புக்குரியது" என்பதை (இதில்) முக்கியப்படுத்திய போது அமைப்பு ரீதியான சில குழப்பங்கள் இவர்களால் ஏற்படுத்தப்பட்டன; இவர்கள் தீமோத்தேயுவையும் தீத்துவையும் இவ்வகையினராய் அடையாளம் கண்டனர். சுவிசேஷகர்களாய் இருந்த தீமோத்தேயுக்கும் தீத்துவுக்கும் இந்த நிருபங்களைப் பவுல் எழுதினார்*

*(1 தீமோ. 1:2; 2 தீமோ. 4:5). புதிய ஏற்பாட்டின் எல்லா போதனையும் மேய்ப்பர் அல்லது ஆயர் (கிரேக்கம்: poimen) என்பவரை கண்காணிகள் அல்லது மூப்பர்களுடன் இணைவு படுத்துகின்றன (அப். 20:17, 28; 1 பேது. 5:1-3; தீத்து 1:5-7ஐக் காணவும்). சுவிசேஷகர் (பிரசங்கியார்) என்பவர் மேய்ப்பரிலிருந்து தனிப்படுத்தப்பட்ட வகையில் அட்டவணையிடப்படுகிறார் (எபே. 4:13). எனவே, கண்காணிகள் அல்லது மூப்பர்கள் கொண்டிருக்க வேண்டிய தகுதிகளை இந்நிருபங்களில் பவுல் பட்டியலிட்டதும் அத்துடன் அவர்களின் ஊழியங்களோடு உறுப்பினர்கள் எவ்வாறு தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பதற்குச் சில ஆலோசனைகளை அளித்துள்ளதும் மட்டுமே இந்த நிருபங்களை "மேய்ப்பர்" என்ற சொற்றொடருடன் இணைப்பதற்கான ஒரே ஒரு காரணமாய் இருக்கும் (1 தீமோ. 3:1-12; 5:17-22; தீத்து 1:5-11). எனவே இது சுவிசேஷகர்களுக்குத் தனிச் சிறந்த வகையில் ஏவப்பட்ட நிருபமாக உள்ளது.* [3]William Hendriksen, *A Commentary on 1 & 2 Timothy & Titus* (London: The Banner of Truth Trust, 1964), 33-34. [4]Merrill C. Tenney, *New Testament Survey* (London: Inter-Varsity Fellowship, 1961), 332-33. [5]Theodor Zahn, *Introduction to the New Testament* (Edinburgh, Scotland: T. & T. Clark, 1909), 2:10. [6]*கி.பி. சுமார் 95ல் ரோமாபுரியைச் சேர்ந்த கிளெமென்ட் என்பவர் கொரிந்தியர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார், அதன் 5ம் பகுதியில் அவர், "நமது தலைமுறைக்குரிய மாண்புமிக்க எடுத்துக்காட்டுகளை நமக்கு முன்பாக அமைத்து வைப்போமாக. பொறாமை மற்றும் விரோதத்தின் காரணமாக ... சபையின் நீதிமிக்க தூண்கள் துன்புறுத்தப்பட்டன ... பவுல் தமது உதாரணத்தினால் பொறுமையுடன் சகித்துக் கொள்ளுதலின் விலையைச் சுட்டிக்காண்பித்தார். அவர் ஏழுமுறை விலங்கிடப் பட்ட பின்பு(ம்) ... கிழக்கிலும் மேற்கிலும் அவர் பிரசங்கித்தார் ... அவர் உலகம் முழுவதற்கும் நீதியைப் பிரசங்கித்து மேற்கின் தொலைதூர எல்லைகளை அடைந்திருந்தார்"* (J. B. Lightfoot, *The Apostolic Fathers* [London: Macmillan and Co., 1891; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1967], 15). Additional information is found in The Muratorian Canon, Eusebius, Chrysostom, Jerome in Hendriksen, 27; and William Barclay, *The Letters to Timothy, Titus and Philemon,* The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1960), 14. [7]*புதிய ஏற்பாட்டில் இன்னும் பத்தொன்பது இடங்களில் தீமோத்தேயு குறிப்பிடப்படுகின்றார்.* [8]*பவுல் முன்பு தீத்துவை விருத்தசேதனம் செய்விக்க மறுத்தும், தீமோத்தேயுவின் விஷயத்தில் அதைச் செய்விக்கும்படியும் பவுல் செயல்பட்டதால், அவர் சீரற்ற தன்மை கொண்டவர் என்று சிலர் குற்றம் சாட்டியுள்ளனர். தீத்து ஒரு புறஜாதியாராய் இருந்தார். ஆபிரகாமுடனான விருத்தசேதன உடன்படிக்கையானது ஒரு புறஜாதியாருக்கு யூதவிருத்தசேதனத்தைக் கேட்டுக் கொள்ள முடியாதிருந்தது, ஏனெனில் தேவன் எபிரெயருடன் மட்டுமே அந்த உடன்படிக்கையை ஏற்படுத்தி யிருந்தார். கிறிஸ்தவ சுவிசேஷமானது விருத்தசேதனம் செய்து கொள்ளும்படி எவரொருவரையும் கேட்டுக் கொள்வதில்லை. ஆகையால், இப்படிப்பட்ட சடங்காச்சாரத்திற்கு உட்படும்படி எவரொருவரும் தீத்துவை வேண்டிக் கேட்க எவ்வித அடிப்படை ஆதாரமும் இருந்ததில்லை. இது பிரமாணப் பூர்வமான செயலுக்கு எதிரான அடிப்படை ஆதாரமாயிற்று. தீமோத்தேயுக்குப் பவுல் விருத்தசேதனம் செய்வித்ததைச் சுட்டிக்காட்ட இந்தக் கூற்றுக்கு எதிரான விவாதம் எதுவும் இல்லை. விருத்தசேதனம் என்பது மதரீதியாகவும் இனம் பற்றிய முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருந்தது. இவ்விரண்டில் எதுவுமே தீத்துவுக்கு ஏற்புடையதாய் இருக்கக் கூடாதிருக்கையில், தீமோத்தேயுவுக்கு இது இனம் பற்றிய தனிக்குறிப்புடையதாயிருக்கக் கூடும். இந்த வெளிச்சத்தில் கண்ணோக்குகையில், முரண்பாடாய்த் தோற்றமளிக்கும் பவுலின் செயல்கள் சீரானவைகளாகவே இருந்தன.*

# *1 தீமோத்தேயு நிருபத்திற்கான வரைகுறிப்பு*

### *எட் சான்டர்ஸ்*

*அதிகாரம் 1*

I. *சுத்த இருதயம், நல் மனச்சாட்சி, மற்றும் உண்மையான விசுவாசம் ஆகியவற்றிலிருந்து போதித்தல்.*
  - *அ. தீமோத்தேயு நல்ல போராட்டத்தைப் போராட வேண்டியவராயிருந்தார் (1:18).*
  - *ஆ. இமெனே மற்றும் அலெக்சந்தர் ஆகியோரின் தவறானது தவிர்க்கப்பட வேண்டியதாயிருந்தது (1:20).*

*அதிகாரம் 2*

II. *ஆண் மற்றும் பெண்ணுக்கேற்ற தக்க பணிப் பொறுப்புகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் கிறிஸ்துவுக்குள் கலக்கமற்ற அமைதியான வாழ்வை நாடுதல்.*
  - *அ. கிறிஸ்தவர்கள் அதிகாரிகளுக்காக ஜெபிக்க வேண்டியவர் களாய் உள்ளனர் (2:1-3).*
  - *ஆ. ஆண்களும் பெண்களும் கலந்துள்ள கூட்டங்களில் பொது ஜெபத்தை ஆண்களே வழிநடத்த வேண்டும் (2:8).*
  - *இ. பெண்கள் தங்களைத் தகுதியான உடைகளால் அலங்கரித்துக் கொண்டு, வீட்டுக்கேற்ற வாழ்வை வாழ வேண்டும் (2:9-15).*

*அதிகாரம் 3*

III. *ஊழியத்தில் வழிகாட்டவும் உதவவும் கண்காணிகள் மற்றும் ஊழியர்களைக் கொண்டு சபையை ஒழுங்கமைத்தல்.*
  - *அ. கண்காணிகள் ஏற்ற வகையில் தகுதிபெற்ற குடும்பத்தின் ஆண்களாய் இருக்க வேண்டும் (3:1-7).*
  - *ஆ. உதவிக்காரர்களும் நல்ல தகுதிகளுடைய கிறிஸ்தவ குடும்பத்தின் ஆண்களாயிருக்க வேண்டும் (3:8-10, 12, 13).*
  - *இ. பெண்கள் தங்கள் கணவர்களின் நியமிக்கப்பட்ட ஊழியப் பணிகளில் அவர்களுக்கு உதவ தகுதி பெற்றிருக்க வேண்டும் (3:11).*

*அதிகாரம் 4*

IV. *விசுவாச விலக்கம் முன்னுரைக்கப்பட்டது.*

அ. இது புலனடக்கத்தினால் விவரிக்கப்படுகின்றது (4:1-5).
ஆ. தீமோத்தேயு மேன்மையான உதாரணமாகவும் இளைப்பற்ற போதகராகவும் இருப்பதன் மூலம் மாபெரும் விழுந்து போகுதலை முன்கூட்டியே தவிர்க்க வேண்டியிருந்தது (4:6-16).

அதிகாரம் 5

V. தீமோத்தேயு தம்முடனும் (பின்வரும்) மற்றவர்களுடனும் தக்கமுறையில் நடந்து கொள்ளுதல் எவ்வாறு என்பதில் அறிவுறுத்தல் பெற்றவராயிருந்தார்.
அ. முதிய கிறிஸ்தவ ஆண்கள் (5:1).
ஆ. இளம் கிறிஸ்தவ ஆண்கள் (5:1).
இ. முதிய கிறிஸ்தவப் பெண்கள் (5:2).
ஈ. இளம் கிறிஸ்தவப் பெண்கள் (5:2).
உ. விதவைகள் (5:3-16).
ஊ. மூப்பர்கள் (கண்காணிகள்; 5:17-22).
எ. தம்மைக் குறித்து, தமது பலவீனமான உடல்நலத்தைப் பேணிக் கொள்ளுதல் (5:23).
ஏ. தாமதமானாலும் தேவன் பலன் அளித்தல் என்பது உறுதியானதென்று அறிந்து, எல்லா வகையான பாவிகளுடனும் (5:24, 25).

அதிகாரம் 6

VI. முடிவில் புத்தி கூறுதல்கள்

---

## 1 தீமோத்தேயு நிருபத்தில் தலைப்புக்களுடன் திறவுகோல் வசனங்கள்

| | | |
|---|---|---|
| அதிகாரம் 1: | 5 | அன்பு |
| | 12, 13 | பவுல், இரட்சிக்கப்பட்ட பாவி |
| | 15 | கிறிஸ்துவும் பாவிகளும் |
| | 17 | அரசராகிய தேவன் |
| | 20 | கள்ள போதகர்கள் |
| அதிகாரம் 2: | 1, 2 | எல்லா மக்களுக்காகவும் ஜெபம் |
| | 5 | மத்தியஸ்தராகிய கிறிஸ்து |
| | 8 | எல்லாக் கிறிஸ்தவர்களாலும் ஜெபம் |
| | 11, 12 | பெண்களின் கீழ்ப்படிதல் |
| அதிகாரம் 3: | 1 | சபையில் நடத்துவத்துவம் |
| | 8, 9 | ஒப்புக் கொடுத்தல் |
| | 16 | தேவபக்தி |

| | | |
|---|---|---|
| *அதிகாரம் 4:* | *1-3* | கள்ள போதகம் |
| | *8, 9* | ஆவிக்குரிய பயிற்சி |
| | *12* | பணிப் பொறுப்பில் மாதிரி; போதித்தல் |
| *அதிகாரம் 5:* | *3* | விதவைகள் |
| | *8* | ஒருவர் தம் சொந்தக் குடும்பத்தைப் பராமரித்தல் |
| | *14* | இளம் விதவைகள் |
| | *17* | மூப்பருக்கு இரட்டிப்பான கனம் அளித்தல் |
| *அதிகாரம் 6:* | *1* | அடிமைகளும் எஜமானர்களும் |
| | *6* | தேவபக்தி |
| | *7* | உடமைகள் |
| | *10* | பண ஆசை |
| | *12* | விடாமுயற்சி |
| | *15* | கிறிஸ்துவின் இராஜரீகம் |